திருச்சிற்றம்பலம்

# இளையான்குடி மாறநாயனார்

பொன் நீடிய அம்பலத்து ஆடும் கூத்தப் பெருமானின் பொன்னார் திருவடிக்குத் தொண்டு செய்த அடியார் பெருமக்களில், நாவலுரார் சுந்தர மூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில் அடுத்து "இளையான் தன் குடி மாறன் அடியார்க்கும்" அடியேன் என்று சிறப்பித்துக் கூறும் இளையான் குடி என்ற ஊரில் தோன்றிய மாறன் எனும் பெயர் தாங்கிய, சூத்திர நற்குலத்தில் தவத்தின் பயனாய்த் தோன்றி மண்ணுலகத்தில் சிவனார் அடிமைத் திறத்திற்கு விளக்கம் தந்த இளையான் குடிமாற நாயனாராவார்.

ஏர்த் தொழிலால் மல்கிய செல்வம் நிறைந்து பெற்று உழவுத் தொழிலால் வரும் உணவு வளங்களும் பெற்று, அடியார் பால் அன்பு மிக்கால் திருத்தொண்டு மேற்கொண்டு சிறந்து வாழ்ந்து வந்தார். இறைவன் அடியார் என்ற ஒரே முறைமையை மனத்தில் வரித்து நேரே வந்தவர் யாவராகினும் அவர்களது முன்னேச் சென்று முகமலர்ந்து வரவேற்று இன்னறுஞ்சொற்களை இனிதே கூறி, கரங்களை குவித்து வணங்கி, இல்லுள் இருத்தி சிரமப் பரிகாரங்களைத் தாமே முன்வந்து செய்து நால் வகையில் சமைத்து அறுசுவை உணவுகளையும் அன்போடு பரிமாறி உண்ணுமாறு நாள்தோறும் கொடுத்து ஒப்பில்லா அண்டர் நாயகர் தொண்டையே முதற்பணியாய்க் கொண்டு வாழ்ந்து வந்தார் (நான் கு வகை உணவு: உண்ணல், தின்னல், நக்கல், பருகல்).




இவ்விதமாய், அழகாபுரியை ஆளும் ஆளுடை நாயகனின் அருமைத் தோழன் குபேரன் போன்று அகமகிழ்ந்து வாழும் நாட்களில்.. இவரது அருட்கொடைத் திறன் ஆனாது பெரும் பொருட் செல்வம் உடையதனால் அன்றோ அன்றி வறுமை மீதுற்று தாழ்வுற்ற நிலைவரினும் தொண்டில் குறையாது நிற்கும் நிலைப் பெற்றவர் என்பதை மண்ணுலகு அறியவேண்டும் என்று தில்லையில் மன்னிய

தென்பாண்டிக் கூத்தன் இறைவன் திண்ணிய எண்ணம் கொண்டு நாயனாருக்கு செல்வம் கரைந்து வறுமை மீதுறச் செய்தனர்.

முற்றிலும் செல்வம் குறைந்த நிலையிலும் சற்றேனும் தொண்டின் திறம் குறையாது வறுமைக் காலத்திலும் இருப்பது எதுவாயினும் அதைக் கொடுத்து இழப்பதற்கு ஏதுமில்லை என்ற நிலை பெற்றப் பின்னரும், தன்னையே விற்றுக் கொடுக்கும் திறன் பெற்றமையால் கடன் பெற்று கடமை மேற்கொண்டு வந்தார். இந்த நிலையில் அயனும் மாலும் அடிமுடி காண இயலாத அம்பலக் கூத்தன், ஒரு நல்ல துறவியார் கோலத்தில் மாறனார் மனை ஏகினார்.

நல்ல மழைக்காலத்தில் இரவு நேரத்தில் பசியாற்றாமையால் கதவு தாழிட்ட நிலையில் தவக்கோலத்தில் வந்த அடியாரை அறிந்து எதிர்கொண்டு வரவேற்று அமரச்செய்தார். அவர் உள்ளம் குளிருமாறு உணவளிக்கவும் விரும்பினார். "நமக்கு இல்லையெனினும் இறைவனார் தொண்டர் அவர் பசியாற்றுவது எவ்விதம்" என்று மனைவியை வினவினார். கற்பு நெறி தவறாத அவரது இல்லாள் செய்வதறியாது திகைத்து நின்று கூறுவரானார் "இந்த அகாலத்தில் நமக்கு கடனாக உதவுவார் யாவருமில்லை. தீவினையின் பயனால் எதுவும் செய்ய இயலேன்." என்று கூறி மேலும் பகர்வார். "ஐயன் மீர் நமக்கு இப்போது உண்டான ஒரே செயல், இன்று பகலில் வயலில் விதைத்த முளை நெல்லை வாரிக் கொண்டு வாருங்கள். நான் தக்க வகையில் சமைத்துத் தருகிறேன். இதைத்தவிர வழியொன்றும் புலப்படவில்லை" என்றார்.

காணக்கிடைக்காத செல்வத்தைக் கண்டெடுத்தது போல் களிப்புற்ற நாயனார் காரிருளிலும் தடம் பார்த்து கழனி சென்றடைந்தார். சாலி வெண்முளைகள் கொள்ளத்தக்க வகையில் காலி கூடையொன்றும் கொண்டு சென்றனர். உலகம் முழுவதுமே உருகிப் பாய்ந்தது போன்ற இருள் ஒருபுறம். உலகே மூழ்கிடும் வண்ணம் மழை மறுபுறம். தண்ணீரில் காலினால் தடவி சாலி முளை முழுவதையும் வாரி நிரப்பி, தமது தலையில் சுமந்து வந்து இல்லம் சேர்ந்தார். இந்நெல்மணிகளை இனிதே சோறாக்கும் திறன் கொண்ட இல்லாள் நெருப்பிட விறகில்லை என்று வருந்தவே, நாயனார் தமது கூரையைப் பிய்த்து கம்புகளை விறகாக்கித் தந்தார். சோறாக்கும் நிலையில் கற்புநெறியில் சிறந்த அவரது மனைவியார் இனி கறிகளுக்கு என்ன செய்வோம் என்று கவலையுற்றபோது, நாயனார், "ஐயோ, பசியின் மிகுதியாலும் நடந்து வந்த களைப்பினாலும் அடியார் வருந்துவாரே" என்று கூறி விரைந்து இல்லத்தின் கொல்லை சென்று குழிகளில் முளைத்த முற்றும் பருவமடையாத கீரைகளை காரிருளிலும் கைகளால் தடவி பறித்து வந்து மனைவியாரிடம் அளித்தார். மனைவியாரும் மகிழ்ந்து, கீரைகளை ஆய்ந்து, தூய பாத்திரத்திலிட்டு கைப்பக்குவத்தினால் பல வகைப்பட்ட கறிகளை சமைத்து உள்ளம் தேறி உணவு வகைகளைத் தயாராக்கினாள்.

நாயனார், துறவிக்கோலத்தில் வந்து துயில்வது போல் கோலம் செய்யும் இறைவரை எழுப்பலானார். "என்பால் எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுது செய்தருள்க" என்று வேண்டலானார். அப்போது அடியாராய் வந்தவரானத் துறவியார் ஒரு சோதியாய் எழுந்து தோன்றவே, நாயனாரும் துணைவியாரும் திகைத்து நின்றனர். இந்நிலையில் மாலயற்கரிய நாதன் ஏலவார் குழாலோடு இணைந்து இடப ரூபனாய் எழுந்தருளி நாயனாருக்கும், அன்புடை மனைவியாருக்கும் அருங்காட்சியளித்து அருளிக் கூறலானார்.

"அன்பனே அடியார் தொண்டில் சற்றும் வழுவாத முறைமையால் வானுலகு வந்து, பெரும்செல்வம் பெற்ற குபேரனும் நின் ஏவல் செய்ய பேரின்பம் பெற்று வாழ்வாயாக என்று அருளினார்.

இப்பரிசு இவர்க்குத் தக்க வகையினால் இன்பம் நல்கி
முப்புரம் செற்றார் அன்பர் முன்பெழுந்தருளிப் போனார்
அப்பெரியவர் தம் தூய அடியினை தலைமேற் கொள்வோம்..

(சேக்கிழார் சுவாமிகள்)

திருச்சிற்றம்பலம்